சின்னச் சின்னதாய்...

சேலம் சோனா தொழில்நுட்ப கல்லூரியில், உலகளாவிய தொழில்நுட்ப பயிற்சி பெற்று, திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாணவர்கள், பேராசிரியர்களுக்கு சோனா கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா, தொழில்துறை வல்லுநர் ரபின்தரசா ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்.

சோனா ஸ்டார், சோனா தொழில்நுட்ப கல்லூரி சார்பில் மாணவர்களுக்கு உலகளாவிய தொழில்நுட்ப பயிற்சி

● சேலம்

சேலம் சோனா ஸ்டார், சோனா தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவை இணைந்து, 'நாளைய தொழில்நுட்பம் இன்று' என்பதற்கேற்ப உலகளாவிய தொழில்நுட்ப பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்கின.

சோனா கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் மற்றும் சோனா ஸ்டார் முதன்மை அதிகாரி தியாகு வள்ளியப்பா தொடங்கிய '3டி எக்ஸ்' என்ற தனித்துவமான ஆராய்ச்சி மையம் மூலம் தொழில்துறை வல்லுநர் ரபின்தரசா வழிகாட்டுதல்படி 6 மாத காலத்தில் ஆறு மிகச்சிறப்பான திட்டம் செயல்படுத்தப்பட்டது.

'அதிக தொழில்முனைவோரை உருவாக்க வேண்டும்' என்ற சோனா கல்விக் குழும துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பாவின் நோக்கத்தின்படி, இத்திட்டம் தொடங்கப்பட்டு, மாணவிகளுக்கும் சரி பங்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் தானியங்கி மின்சார வாகனம், ட்ரோன், ஏ.ஆர்.வி.ஆர் வசதி போன்ற சிறப்பான தொழில்நுட்பங்களை 150 மாணவர்கள் மற்றும் 20 பேராசிரியர்களுக்கு பிரத்யேக பயிற்சி அளிக்கப்பட்டு, திட்டம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பயிற்சியை ஒருங்கிணைத்த சோனா ஸ்டார் தொழில் ஆலோசகர் சுரேஷ் ரா, திட்ட தலைவர் நாகராஜன், சோனா மெக்கானிக்கல் துறைத் தலைவர் செந்தில்குமார், துணை துறைத் தலைவர் முரளிதரன், பேராசிரியர் வெங்கடேஷ் ராஜா ஆகியோரை நிர்வாகத்தினர் பாராட்டினர்.

திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வந்த 150 மாணவர்கள், 20 பேராசிரியர்களுக்கு சோனா கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் தியாகு வள்ளியப்பா, தொழில்துறை வல்லுநர் ரபின்தரசா ஆகியோர் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிகழ்வில் சோனா கல்வி குழுமத்தின் முதல்வர்கள் கார்த்திகேயன், காதர் நவாஷ் மற்றும் பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் கோவை டெக்னோடேக்கிள் சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸ் இடையே, மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், கல்லூரி முதல்வரும், நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியும் கையொப்பமிட்டனர்.

கோவை சாஃப்ட்வேர் நிறுவனத்துடன் கொங்கு பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்

● ஈரோடு

பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் கோவை டெக்னோடேக்கிள் சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸ் இடையே, மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொங்கு பொறியியல் கல்லூரியில் படிக்கும் இளம் மாணவ கண்டுபிடிப்பாளர்களுக்கு நிகழ்நேர பயிற்சிகளை வழங்குவதற்காக, வளாகத்துக்குள் ஒரு சூழலை உருவாக்க கல்லூரி நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒருபகுதியாக கோவையில் செயல்படும் டெக்னோடேக்கிள் சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, மாணவர்கள் நேரடி திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கும், அதன் மூலம் மாணவர்கள் கல்லூரி சூழலில் இருந்து தொழில்முறை பணிச்சூழலுக்கு முன்னேறவும் வாய்ப்பு ஏற்படும். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், டெக்னோடேக்கிள் சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸ் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியான பாலவிஷ்ணு மற்றும் கல்லூரி முதல்வர் பாலுசாமி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியில், டெக்னோடேக்கிள் சாஃப்ட்வேர் சொல்யூஷன்ஸின் பங்குதாரர்களான மதுமிதா மற்றும் பழனியப்பன் கல்லூரி ஐஐபிசியின் முதன்மை ஒருங்கிணைப்பாளர் சத்திய மூர்த்தி, ஐடி. துறைத்தலைவர் ஆனந்தமுருகன் மற்றும் பேராசிரியர் தங்கராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால்

பிப்.27-ம் தேதி முதல் வேலைநிறுத்தம்

● வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தினர் அறிவிப்பு

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தினர். (அடுத்தபடம்) ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட வருவாய்த்துறை அலுவலர்கள்

● சேலம்/நாமக்கல்/ஈரோடு

தமிழக அரசு 10 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் வரும் 27-ம் தேதி முதல் காலை வரைற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில், 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சேலம் கோட்டை மைதானத்தில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் பிரபு தலைமை வகித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்க மாவட்ட தலைவர் திருவேரங்கன், மாநில துணைத் தலைவர் அர்த்தனாரி, செயற்குழு உறுப்பினர் அருள் பிரகாஷ் முன்னிலை வகித்தனர்.

அப்போது, வருவாய்த்துறை அலுவலர் சங்க மாநில துணைத்தலைவர் அர்த்தனாரி கூறியது:

பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்கப் பாதுகாப்பு அரசாணையை வெளியிட வேண்டும். வருவாய்த் துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். சான்றிதழ் வழங்கும் பணிக்கென புதிய துணை வட்டாட்சியர் பணியிடங்களை உடனே ஏற்படுத்த வேண்டும் என்பன உள்பட 10 கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக தமிழக அரசு உடனடியாக வருவாய்த் துறையினரை அழைத்து சுமுக தீர்வு காண வேண்டும். இல்லையெனில் வரும் 22-ம் தேதி அனைத்து பணிகளையும் புறக்கணித்து காத்திருப்பு போராட்டம் நடத்தப்படும். அதற்கும் தமிழக அரசு செவிசாய்க்க வில்லையென்றால் வரும் 27-ம் தேதிமுதல்காலவரையற்றவேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

நாமக்கல்

நாமக்கல் பூங்கா சாலையில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு, வருவாய்த்துறை அலுவலர் சங்க மாவட்ட தலைவர் வி.ஆனந்தன் தலைமை வகித்தார். மத்திய செயற்குழு உறுப்பினர் ஏ.ராணி போராட்டத்தை தொடங்கி வைத்தார். அரசு பணியாளர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.முருகேசன், நகர இணைச்செயலாளர் எம்.தாமோதரன் ஆகியோர் பேசினர். போராட்டத்தில் பங்கேற்க மாவட்டம் முழுவதும் 160 பேர் தற்செயல் விடுப்பு எடுத்ததாக அலுவலர்கள் தெரிவித்தனர். சங்க மாவட்ட செயலாளர் எஸ்.விஜயகாந்த், மாவட்ட பொருளாளர் ஜி.பிரகாஷ், துணை தலைவர் சு.மணிகண்டன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு

ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்துக்கு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் ஜெகநாதன் தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர் குமரேசன் உண்ணாவிரதத்தை தொடங்கிவைத்து பேசினார். மாவட்ட செயலாளர் ரமேஷ் கோரிக்கைகளை வலியுறுத்தினார். இதில், வருவாய்த் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எம். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

மூலப்பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்தக்கோரி

'ஹாலோ பிளாக்' உற்பத்தியாளர்கள் வேலைநிறுத்தம்

3 மாவட்டங்களில் கட்டுமான பணிகள் பாதிப்பு

● ஈரோடு

மூலப்பொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தி கோபி, நம்பியூர் வட்டார ஹாலோபிளாக் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், கட்டுமானத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் கோபி, நம்பியூர் பகுதிகளில் 100- க்கும் மேற்பட்ட ஹாலோ பிளாக் தயாரிப்பு ஆலைகள் உள்ளன. இங்கிருந்து நாள்தோறும் 2.50 லட்சம் ஹாலோ பிளாக் கற்கள் உற்பத்தி செய்யப்பட்டு ஈரோடு, கோவை, திருப்பூர் மாவட்டங்களில் கட்டுமாப் பணிக்காக அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஹாலோ பிளாக் தயாரிக்கத் தேவையான மூலப்பொருட்கள் விலை தொடர்ந்து அதிகரித்து வந்த நிலையில், அதன் தயாரிப்பு பணிகள் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், ஹாலோ பிளாக் கற்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருளாக உள்ள கிரஷர் மண், ஜல்லி, சிமெண்ட் போன்றவற்றின் விலையை கட்டுப்படுத்த வலியுறுத்தி கோபி, நம்பியூர் தாலுகாவில் உள்ள 100 -க்கும் மேற்பட்ட ஹாலோ பிளாக் உற்பத்தியாளர்கள் 3 நாள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர். அவர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 2-வது நாளாக தொடர்ந்த நிலையில் கட்டுமானப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

> கடந்த ஆண்டு ஒரு யூனிட் கிரஷர் மண் 2,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு ரூ. 4,200 ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து ஹாலோபிளாக் உற்பத்தியாளர்கள் கூறியதாவது:

ஹாலோ பிளாக் தயாரிப்ப தற்கான மூலப்பொருட்களின் விலை, கடந்த ஓராண்டில்100 சதவீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு யூனிட் கிரஷர் மண் 2,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு ரூ. 4,200 ஆக உயர்ந்துள்ளது. இதனால் ஹாலோ பிளாக் கற்களின் விலையை கணிசமாக உயர்த்த வேண்டிய நிலை உள்ளது. 6 அங்குல அளவுள்ள ஒரு ஹாலோ பிளாக் கல் தற்போது 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் நிலையில் மூலப்பொருள் விலை உயர்வு காரணமாக 40 முதல் 45 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டால் மட்டுமே இழப்புகளை சமாளிக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு விலையை உயர்த்தினால் மூன்று மாவட்டங்களிலும் கட்டுமான தொழில் முழுமையாக பாதிக்கப்படும். கட்டிடத்தின் மதிப்பீட்டில் கூடுதலாக 20 முதல் 30 சதவீதம் செலவு அதிகரிக்கும். இதனால் கட்டுமான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் வரை அனைவரும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் – 6
ம.அ.6.ந.க.எண்.இ1/508/2024

மின்னணு திறந்த வெளி இரண்டு உறை முறையில் (Online Open e - Tender) ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

மண்டல அலுவலர் - 6 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு திறந்தவெளி (Open e-Tender) ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 6, பகுதி -16, கோட்டம் - 70, கபிலர் தெருவில் புதியதாக நடுநிலைப்பள்ளி கட்டிடம் (G+1) கட்டும் பணி.

மொத்தப் பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.370.54 இலட்சம் (முன்வைப்பு தொகை ரூ.3,71,000/-)

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் 29.02.2024 மற்றும் நேரம் அன்று மாலை 3.00 மணி வரை.

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் 01.03.2024 மற்றும் நேரம் அன்று மாலை 3.30 மணி.

மேலும் விவரங்களுக்கு (http://tntenders.gov.in) மற்றும் www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 933 / ஒப்பந்தப்புள்ளி / 2024

மண்டல அலுவலர் / ம -6

TAMIL NADU URBAN HABITAT DEVELOPMENT BOARD
SUPERINTENDING ENGINEER, CHENNAI EAST - I CIRCLE

NOTICE INVITING e-TENDER

Name of the work : Construction of Community Hall (G+1) including electrification, Water Supply and Sanitary arrangements at Navalur scheme in Kancheepuram District under funds available in CMDA

TENDER REFERENCE No. TNUHDB/ 09 / HD / SE (East-I) / 2024

The Superintending Engineer, Chennai East-I Circle on behalf of Tamil Nadu Urban Habitat Development Board invites submission of online bids from eligible bidders for the contract package named above. Bids are invited under Two cover system to be uploaded in the online web portal **https://tntenders.gov.in.**

The Bid document for the above package would be available at **https://tntenders.gov.in** starting from **15.02.2024** Deadline of bid submission is upto **12.00 Noon** on **28.02.2024.** All required information are provided in the bid document.

Bidders may contact **Superintending Engineer, Chennai East-I Circle, TNUHDB** through **Email: seeast1tnuhdb@gmail.com** for any other information on bidding process.

Superintending Engineer
EAST- I CIRCLE, TNUHDB

DIPR/ 911 /TENDER/2024

திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்
ந.க.எண்.356/2023 நாள். 13.02.2024

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (Two Cover Sysstem)

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் பணிகளை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024-2025-ன் மேற்கொள்ள 29.02.2024 வியாழன்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி வரை கீழ்காணும் இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பணிக்கான முன் வைப்புத் தொகையினை பணி மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் இணையதளம் வழியாக செலுத்தப்பட வேண்டும்.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும். பணி சம்மந்தப்பட்ட ஒப்பந்தப் படிவங்களை 29.02.2024 வியாழன்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி வரை www.tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணி சம்மந்தமான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

வ. எண்.	பணியின் பெயர்	மதிப்பீட்டு தொகை (ரூபாயில்)	வைப்புத் தொகை (1 சதவீதம்)
1	வார்டு எண்.1–ல் ஆசிரியர் நகர் 7 வது தெரு, 8வது பிரதான சாலை, 11வது தெரு, வ.உ.சி நகர், வார்டு எண்.3–ல் மாதுளங்குப்பம் பிரதான சாலை, வார்டு எண்.8–ல் மங்கலம் பெரிய தெரு 1,2,3, மற்றும் 4வது குறுக்கு தெரு, வார்டு எண்.9–ல் ரிச் நகர், வார்டு எண் 12–ல் நாவலூர் இருளர் குடியிருப்பு வார்டு எண்.18–ல் மாமல்லபுரம் புற வழிச்சாலை முதல் வளம் மீட்பு பூங்கா இணைக்கும் சாலை, வளம் மீட்பு பூங்கா 1வது மற்றும் 2வது குறுக்கு தெரு, பழைய மற்றும் புதிய காலனி, மேட்டு மங்கலம் இணைப்பு சாலை மண் சாலையினை தார் சாலையாக அமைத்தல் பணி.	273.00 இலட்சம்	2.73 இலட்சம்
2	வார்டு எண்.9–ல் ஏரிக்கரை இருளர் குடியிருப்பு, வார்டு எண்.10–ல் சங்கு குளம் தெற்கு மற்றும் மேற்கு தெரு, வார்டு எண்.16–ல் மாரியம்மன் கோயில்தெரு, வார்டு எண்.18–ல் சட்டாரஸ் ரோடு ஆரப்பன் சாலை, மேட்டு மங்கலம் பள்ளி தெரு, சாலை மண் சாலையினை சிமெண்ட் சாலையாக அமைத்தல் பணி.	88.00 இலட்சம்	0.88 இலட்சம்

செ.ம.தொ.இ/904/ஒப்பந்தப்புள்ளி/2024 செயல் அலுவலர், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்

தமிழ்நாடு அரசு
இராஜபாளையம் நகராட்சி
விருதுநகர் மாவட்டம்
ந.க.எண். 400/2024/இ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்.12.02.2024

இராஜபாளையம் நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு 2023–2024 மற்றும் 2024–25 –ன் கீழ் சாலை பணிகள் மேற்கொள்ள இராஜபாளையம் நகராட்சி ஆணையாளர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பணியின் மதிப்பு **ரூ. 345.50 இலட்சம். (4 சிப்பங்கள்)**
2. முன்வைப்புத்தொகை: **Package -1 .Rs.93000, Package -2 .Rs.83500, Package -3 .Rs.81500, Package -4 .Rs.87500**
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியிலிருந்து **13.02.2024** அன்று **மாலை 6.00 மணி** முதல் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள் :

அ)	ஒப்பந்தப்புள்ளிக்கு முன்கலந்தாய்வுக்கூட்டம்	:	16.02.2024 காலை 11.00 மணி
ஆ)	ஒப்பந்த நமூனா இறக்கம் செய்வதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	:	23.02.2024ம் தேதி மாலை 03.00 மணி வரை
இ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்	:	23.02.2024ம் தேதி மாலை 03.00 மணி வரை
ஈ)	ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல்	:	23.02.2024ம் தேதி மாலை 03.30 மணி

5. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் பெறப்பட்டு திறக்கப்படும்.
6. ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

ஆணையாளர்,
செமதொஇ/939/ஒப்பந்தப்புள்ளி/2024 இராஜபாளையம் நகராட்சி

TNPL TAMILNADU NEWSPRINT AND PAPERS LIMITED
Kagithapuram - 639 136. Karur Dist. Tamil Nadu.
Ph.: 04324-277001 (10 Lines). Email: insurance.fo@tnpl.co.in

NOTICE INVITING TENDER

Tender No.	Material Description	Date of publishing Tender document in TNPL/NIC website	Due date
2024-25/ TNPL/ INS/ RENE WAL	Fixing of Insurer(s) for Renewal of various insurance policies covering TNPL properties, Employees, Interests, Liabilities etc., which are due for Renewal on 27.05.2024. Quotes are invited from General Insurance Companies / Authorised Agents / Brokers - Licenced by IRDAI	29.04.2024	13.05.2024 before 11:00 AM

Terms & conditions and sum insured details are available in tender document at our websites: www.tnpl.com / www.tenders.tn.gov.in

DIPR/878/Tender/2024 TNPL - Maker of bagasse based eco-friendly Paper

ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்
சட்ட மற்றும் ஆதரவுக் குழு, 2வது தளம், கதவு எண்.31, பழைய எண்.14, தெற்கு மாடத் தெரு, மயிலாப்பூர், சென்னை–600 004

கோரிக்கை அறிவிப்பு

அன்புடையீர்,

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டம், உடன் படிக்கக்கூடிய 2002 பிணையநலன் அமலாக்கம் விதிகளின் விதி 3(1) ன் பிரிவு 13(2)–ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு.

கீழ்காணும் கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது: 2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் உங்கள் மீது நடவடிக்கை துவங்கியுள்ளது. இவ்வங்கி மேற்படி சட்டம் பிரிவு 13(2)–ன் கீழ் உங்கள் அனைவருக்கும் கீழே குறிப்பிட்ட தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பினை ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் அனுப்பப்பட்ட அந்த நோட்டீஸ் பட்டுவாடா ஆகாமல் திரும்பி வந்துவிட்டது. இந்த அறிவிப்பினை கவனத்தில் எடுத்துக் கொண்டு, இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள் கீழ்காணும் கடன் பாக்கித் தொகையை செலுத்திடுமாறு உங்கள் அனைவரிடமும் இதன் மூலம் கோரப்படுகிறது. உங்கள் கடன் கணக்கு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா வழிகாட்டுதலின்படி வாராக்கடன் (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தவறினால் மேற்படி சட்டம் பிரிவு 13 மற்றும் உபபிரிவு (4)–ன் கீழ் வங்கிக்கு இருக்கும் உரிமைகளை கீழ்காணும் அடமான சொத்து மீது பிரயோகித்து நீங்கள் செலுத்த வேண்டிய கடன் பாக்கித் தொகையையும், வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்து வசூலிக்கும் பொருட்டு உங்கள் அனைவரின் மீதும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் இந்த அறிவிப்பு வங்கிக்கு இருக்கும் எந்தவொரு தீர்ப்புக்கும் பாதகமின்றி வெளியிடப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரிந்ததே.

மேற்படி கடனை அடைப்பதற்கான ஈடாக நீங்கள் அனைவரும் கடன் ஒப்பந்தத்தை கையெழுத்திட்டும் கீழே விவரிக்கப்படுள்ள சொத்தினை உரிமை பத்திரங்களை உரியதான முறையில் அடமானம் வைத்தும் ஆக்சிஸ் பேங்க் லிமிடெட் வசம் ஒப்படைத்துள்ளீர்கள்.

SARFAESI சட்டம் பிரிவு 13(8)–ன்படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன்பாக்கி, வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், கம்பெனி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து, கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்படமாட்டாது அல்லது உரிமை மாற்றித்தரப்படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

1. (Ref No : 7326) 1. திரு. முத்து K (கடன்தாரர்), த/பெ. திரு. காளியண்ண கவுண்டர், **2. திரு. கோவிந்தராஜன் M (சார்–கடன்தாரர்),** த/பெ. திரு. காளியண்ண கவுண்டர், பழைய எண்.10, புதிய எண்.13, மாரியம்மன் கோயில் வீதி, சத்தியமங்கலம், ஈரோடு – 638 401 (இருவருக்கும் விலாசம் பொது). NPA தேதி : 07.06.2023 ; கோரிக்கை அறிவிப்பு தேதி: 21.07.2023; கடன் நிலுவைத் தொகை: (கடன் கணக்கு எண். 914030017026371): 21.07.2023 அன்றுள்ளபடி **ரூ.10,25,542.31** (இந்த தொகையானது 21.07.2023 வரை வட்டியுடன்) மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, இதர செலவுகள்.

அசையாச் சொத்து விவரம் : M.கோவிந்தராஜன் பெயரில் அமைந்த சொத்து. கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் தாலூகா, கோட்டுவீரம்பாளையம் கிராமம், சத்தியமங்கலம் டவுன், வார்டு 'A', பிளாக் எண்.6, டவுன் சர்வே எண்.124 (சர்வே எண்.89/3ர), இதிலமைந்த 0.0700.0 புஞ்சை ஹெக்டேரில் ஒரு பகுதி 1396 சதுரடி நிலம் மற்றும் கட்டிடங்களின் **எல்லைகள் விபரம் :** வடக்கே – வீரம்மாளின் சொத்து, தெற்கே – ஆறுமுகத்தின் சொத்து, கிழக்கே – லாலாமியான் சாகிப்பின் வீடு, மேற்கே – தென்வடல் சந்து. அங்குள்ள கட்டிடங்களுடன், மின்சார இணைப்பு S.C.எண்.342 ல் உரிமை, பொருத்தியவைகள், பிட்டிங்குகள், வசதிகள் மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். இச்சொத்து கதவு எண்.23, மாரியம்மன் கோவில் வீதியில் உள்ளது.

K.முத்துவின் பெயரில் அமைந்த சொத்து. கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் சார் பதிவு மாவட்டம், சத்தியமங்கலம் தாலூகா, கோட்டுவீரம்பாளையம் கிராமம், சத்தியமங்கலம் டவுன், வார்டு 'A', பிளாக் எண்.6, டவுன் சர்வே எண்.82 (சர்வே எண்.89/3ர), இதிலமைந்த 0.0110.0 புஞ்சை ஹெக்டேர் முழுமைக்குமான **எல்லைகள் விபரம் :** வடக்கே – பழனியப்பாவின் சொத்து, தெற்கே – நகராட்சி சந்து, கிழக்கே – தென்வடல் சந்து, மேற்கே – தென்வடல் ரோடு. அங்குள்ள கட்டிடங்களுடன், மின்சார இணைப்பு S.C.எண்.139 மற்றும் 661 ல் உரிமை, குழுநீர் இணைப்பு, பொருத்தியவைகள், பிட்டிங்குகள், வசதிகள் மற்றும் வழக்கமான வழித்தட உரிமைகளுடன். இச்சொத்து சத்தியமங்கலம் நகராட்சி, கதவு எண்.13, மாரியம்மன் கோவில் வீதியில் உள்ளது.

2. (Ref No : 7414) 1. திருமதி. சாந்தி R (கடன்தாரர்), க/பெ. திரு. ராமசாமி, எண்.3/64, விளங்காட்டூர், காடச்சநல்லூர், திருச்செங்கோடு, நாமக்கல் – 638 008. **2. திரு. வெங்கடேசன்.P (உத்தரவாதமளித்தவர்),** த/பெ. திரு. C.பழனியப்பன், தொட்டகாஜனூர், தாளவாடி, சத்தியமங்